**O.S. No.** 59/2015

Date : **20.11.2019.**

வாசா. *1* - திருமதி மீனாட்சி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 8வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

தாவா சொத்து அங்கம்மாளுக்கு பாத்தியப்பட்டதாகும். அங்கம்மாள் எனது அப்பாவின் பாட்டியாகும். அங்கம்மாளின் கணவர் பெயர் முத்துலிங்கம்பிள்ளை. அங்கம்மாள்-முத்துலிங்கம்பிள்ளைக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். தாவா சொத்து மாசாணம் மற்றும் வீரகாமுலு அம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். மாசாணத்திற்கு வீரம்மாள் மற்றும் அங்கம்மாள் இரு மகள்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். வீரம்மாளும், அங்கம்மாளும் எனது தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரிகள். மாசாணத்திற்கு செல்லம்மாள் ஒரு மகள் ஆவார். செல்லம்மாளும் எனது தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரி. அந்த செல்லம்மாளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. எனது தகப்பனார் சுப்ரமணியமும் ஒரு வாரிசு ஆவார். மாசாணம் மற்றும் வீரகாமுலு அம்மாள் வாரிசுகள் அவர்கள் சொத்துக்களை பொறுத்து பாகம் செய்து கொண்டார்கள். பாகம் பிரித்துக்கொண்ட விபரத்தை எனது தாவாவில் நான் குறிப்பிடவில்லை. பாகம் எழுத்துப்பூர்வமாக செய்யப்படவில்லை. வாய்மொழியாகத் தான் செய்து கொண்டார்கள். எழுத்துப்பூர்வமாகவோ அல்லது வாய்மொழியாகவோ செய்தகொண்ட பாகத்தை பதிவு செய்து கொள்ளவில்லை. நான் கூறுவது தவறு என்றும், மாசாணம் மற்றும் வீரகாமுலு அம்மாள், அவரது வாரிசுதாரர்கள் சொத்துக்களை பொறுத்து எவ்வித பாகப்பிரிவினையும் செய்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. மாசாணம் மற்றும் வீரகாமுலு அம்மாளின் வாரிசுதாரர்களை அனைவரையும் தரப்பினர்களாக சேர்க்காமல் பாகம் செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் பெயர் வெள்ளைத்தாயம்மாள். எனது பெற்றோருக்கு நாங்கள் 9 ஆண் மக்கள்

மற்றும் 2 பெண் மக்கள். நானும் 3வது பிரதிவாதியும் தான் இரு பெண் வாரிசுகள். எனது திருமணம் 11.12.1980-ல் நடந்தது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் திருமண அழைப்பிதழ் எனது திருமண அழைப்பிதழ் தான். அது **பிவாசாஆ.1** ஆகும். எனது சகோதரி லட்சுமிக்கு 1986-ல் திருமணம் நடந்திருக்கும் என்று சொன்னால், நடந்திருக்கலாம். யார் யாருக்கு எந்த வருடத்தில் திருமணம் நடந்தது என்ற விபரத்தை பிராதில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd./ G. Vijaya
முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.